6. சுற்றுச்சூழல் மற்றும் வனம் மற்றும் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

பிற்பகல் 12—45

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி எண் 110—ன்கீழ் வனம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்தும், நீதிமன்ற மேம்பாடுகள் குறித்தும் வெளியிட்டிருக்கும் அறிவிப்புகளை வரவேற்று, பாராட்டுகின்றேன். இன்று, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் காடுகளின் பரப்பளவு அதிகரித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாகக் கவலைப்படும் நிலையில், தமிழ்நாட்டில் புலிகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வும், அக்கறையும், பிற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில்தான் அது பெருகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு கடந்த 5 ஆண்டுகளிலே சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததுதான் மிக முக்கியக் காரணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது மக்களின் மனங்களை வென்றெடுக்கும் அரசு மட்டும் அல்ல, வனங்களையும் காக்கும் அரசு; விலங்குகளையும் காக்கும் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சிறைப் பாதுகாப்பு குறித்தும், நீதிமன்ற பணிகளுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் பல அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அத்தனை அறிவிப்புகளும் சர்க்கரையாக இனிக்கும் அறிவிப்புகள் என்ற வகையிலே அனைத்தையும் வரவேற்று, பாராட்டி மகிழ்ந்து அமருகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைக்குத் தேர் தந்தார் பாரி; மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி எண் 110—ன்கீழ் காடுகளில் இருக்கும் செடிகள், கொடிகள் மற்றும் மரங்களுக்கெல்லாம் இன்று பல 100 கோடிகளை அள்ளித் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காடுகளின் பரப்பளவை அதிகப்படுத்தியிருப்பதில், இந்தியாவிலே தமிழகம்தான் முதல் மாநிலமாக இருக்கிறது என்கிற நல்ல செய்தியோடு, புதிய திட்டங்களையும் தந்துள்ள தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு உயர நாளும் திட்டம் தரும் ஒரே முதல்வர் நம் தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ‘அறம் செய்ய விரும்பு’ அது சான்றோர் சொல். அமைதி, வளம், வளர்ச்சி என்ற முழக்கத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கே, உலகத்திற்கே அரசியல் நிருவாக நிலைகளிலே முன்வைத்ததோடு மட்டுமல்ல, அரசுத் துறைகளின் அனைத்துப் பிரிவுகளிலும் அந்த அமைதியை, வளத்தை, வளர்ச்சியைச் செயலாக்கிட அனுதினமும், ஒவ்வொரு நொடியும் திட்டம் தருகிற புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழ்நாட்டை ஒரு நல்லரசாய், வல்லரசாய் உருவாக்கி வருகிறார்கள். நேற்றுகூட கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அலகை நாட்டிற்கு அர்ப்பணிக்கின்ற விழாவிலே உலகத்தின் மிகப் பெரிய வல்லரசான ரஷ்ய நாட்டின் அதிபர் அவர்களோடும், இந்தியப் பேரரசின் பிரதமர் அவர்களோடும் நம்முடைய நல்லரசு, தமிழ்நாட்டினுடைய வல்லரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) காணொலிக் காட்சிமூலம் திறந்து வைத்துள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவிலே அந்த அலகை நிர்மாணித்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்று வனம் செழிக்க, காடு செழிக்க அளப்பரிய திட்டங்கள் தந்துள்ளார்கள். 300 மரத் தாவர வகைகளை உள்ளடக்கிய மரப் பூங்கா உருவாக்குதல். இந்தியாவிலே 300 வகையான மரங்களை உள்ளடக்கிய ஒரு பூங்காவை 3 கோடி ரூபாய் செலவிலே உருவாக்க முதன்முதலில் திட்டம் தந்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, மருத்துவச் செடிகளை வளர்க்கத் திட்டம்; அதுவும்,

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக, வனங்களை ஒட்டியிருக்கிற கிராமத்துத் தாய்மார்களுடைய பராமரிப்பிலே (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மருத்துவச் செடியும், கொடியும் வளர்ந்து, அவர்களுடைய வாழ்வு செழித்து, மானுட சமூகத்தினுடைய வாழ்வு செழித்து, மருத்துவ குணம் தாங்கிய செடியும், கொடியும் செழித்து, வளர திட்டம் தந்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, வண்டலூர் உயிரியல் பூங்காவில் இருக்கிற பறவைகளை, விலங்குகளை, உயிரினங்களை நாம் பார்த்துப் பார்த்து இரசிப்போம். அதை நேரடியாகக் கண்டுகளிப்பதோடு மட்டுமல்லாமல், ரூபாய் 50 இலட்சம் செலவில் நாட்டில் யார் வேண்டுமானாலும் காணொலிக் காட்சி மூலமாகக் கண்டு இரசிப்பதற்கு புதிய திட்டத்தை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்திய தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இது முதன்முதலில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டம். வேறு யார் தந்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பறவைகளை, விலங்குகளை மக்கள் பார்ப்பதோடு மட்டுமல்ல; அதனுடைய நிருவாகத்தையும் கண்காணித்து, பராமரிப்பதற்கு ஏதுவாக ஒரே நிகழ்வில் இரண்டு வகையான பாதுகாப்பை, மலர்ச்சியைத் தந்த தலைவி, தங்கத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—50

சிறைவாசிகள் பற்றிக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எவ்வளவு கவனமாக இருக்கிறார்கள். 2004—ல் முதன்முதலாக, காணொலிக் காட்சி மூலமாக சிறைவாசிகளைக் காவல் நீட்டிப்பு செய்வதற்கு திட்டத்தை அறிமுகப்படுத்தியவர், மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள். எவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியான (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்நிலையிலும், சிறைக் காவலர்கள், சிறைக் காவலிலிருந்து சிறைவாசிகளை நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து, அவர்களை நீதிபதிகளின் முன் நிறுத்தி, காவல் நீட்டிப்பு செய்வதற்குண்டான கால விரயம், பண விரயத்தைத் தடுத்து நிறுத்தியவர், அறிவு சார்ந்த நவீன இந்தியாவினுடைய சிற்பி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கைதிகளைக்கூட சிறைக்கூடத்திலிருந்து, நீதிபதிகள் பார்த்து காவல் நீட்டிப்பு செய்கிற ஓர் அறிவு சார்ந்த நிருவாக மேலாண்மையை

சிறைத் துறையில் அறிமுகப்படுத்திய தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்பொழுது சிறைத் துறையின் அனைத்து வகையான நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்குக் கேமிராக்களை ஏராளமான செலவில் புதிதாக விரிவுபடுத்தியிருக்கிற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நீதிக்குத் தலை வணங்குகிற, நீதியின் வடிவமாய் இருக்கிற, கருணையின் வடிவமாய், அன்பின் வடிவமாய் இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தாய்த் தமிழ்நாட்டினுடைய நீதி செழிக்க, நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட புதிய, புதிய திட்டங்கள் தந்தவர். என்னுடைய காங்கேயம் சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தாராபுரத்திலுள்ள உதவி நீதிமன்றத்தை காங்கேயத்திற்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றும்வகையில், இந்த நிதிநிலை அறிக்கையில், தாராபுரத்திலிருந்து பிரித்து காங்கேயத்திற்கு sub–court தந்த தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று திருப்பூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்து, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த நீதிமன்றக் கட்டடங்களையெல்லாம் 33 கோடி ரூபாய் செலவில் கட்ட அறிவிப்புச் செய்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நீதித் துறைக்கு நீதிமன்றக் கட்டடங்கள் மட்டுமல்லாமல், நீதிபதிகள் அமைதியாக, பாதுகாப்பாக, வசதியாகக் குடியிருப்பதற்கு குடியிருப்புகள் தந்தவர், நீதியின் பேரரசி, (மேசையைத் தட்டும் ஒலி) நீதி தேவதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று விதி 110–ன்கீழ் அறிவித்த அனைத்துத் திட்டங்களையும் வரவேற்று, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

***திரு. சே. கருணாஸ்:**

தெய்வமே! தெய்வமே!

நன்றி சொல்வேன், தெய்வமே!
(மேசையைத் தட்டும் ஒலி)

தேடினேன், தேடினேன்,

கண்டுகொண்டேன் அன்னையை!
(மேசையைத் தட்டும் ஒலி)

கண்டுகொண்டேன் அன்னையை!

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் ஒரு நாட்டினுடைய வளம். இந்த உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை ஜீவராசிகளும் ஒன்றையொன்று சார்ந்து மட்டும்தான் வாழ்கின்றன என்பதுதான் உலகத் தத்துவம். அதிலும் குறிப்பாக, இயற்கை. இயற்கை வளங்களைச் சார்ந்த பூச்சிகள், செடிகள், சின்னச் சின்ன குருவிகள் இப்படி அத்தனை ஜீவராசிகளும் மனிதனுடைய வாழ்வில் ஏதாவது ஒரு ரூபத்திலே ஒன்றுபட்டிருக்கும், ஒன்றையொன்று சார்ந்திருக்கும். குறிப்பாக பார்த்தீர்களேயானால், தேனீக்கள். தேனீக்களுடைய மகரந்தச் சேர்க்கை என்பது இந்த உலகத்தினுடைய, இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய உலகத்திற்கு மகத்துவமானது என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். அதிலும் அவர்கள் அபாயகரமாக ஒன்றைச் சொல்கிறார்கள். தேனீக்கள் என்றைக்கு இந்த உலகத்தில் அழிகிறதோ அன்றிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் மனிதவர்க்கமே அழிந்துவிடும் என்று சொல்கிறார்கள். அந்த விதத்திலே, இந்த மக்களைக் காக்க வேண்டிய புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்த மக்களை நல்ல முறையிலே இயற்கையோடு, நலத்தோடு வாழ வைப்பதற்காக இயற்கையைப் பாதுகாத்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இது நடக்கும் என்கிற ஓர் உயர்ந்த எண்ணத்திலே அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். குறிப்பாக இந்தியாவிலே தமிழகத்திலேதான் அடர்ந்த காட்டுப் பகுதிகளும், மரங்களும், செடிகளும் அதிகமாக இருக்கின்றன. கிட்டத்தட்ட 26,345 சதுர கிலோமீட்டர் நிலங்களுக்கு மேலாக இருக்கின்றன என்று ஓர் ஆய்விலே படித்தேன். ஆக, வளங்களைக் காக்க வேண்டுமென்பதற்காக இப்படி எண்ணற்ற நலத் திட்டங்களை 110 விதியின்கீழே, மின்சாரம், மக்களுக்குத் தேவையான அத்தனை விஷயங்களையும், ஒவ்வொன்றாகக் கவனமாக யோசித்து, யோசித்து, தொலைநோக்குப் பார்வையிலே, 'மக்களுக்காகவே நான், மக்களால் நான்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பது வெறும் வார்த்தை மட்டுமல்ல, இது சத்தியமான உண்மை என்பதை ஒவ்வொரு நிமிடமும் நிரூபித்துக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மனமார வாழ்த்துகிறேன்.

பிற்பகல் 12—55

நீதிபதிகள், நீதித் துறை, சிறைக் கைதிகள் இவர்களுடைய தேவைகளை உணர்ந்து, குறிப்பாக அதிலே மகத்துவமான ஒரு வார்த்தை, நீதித் துறை தமிழகத்திலே சொந்தக் கட்டடத்தில் அ.தி.மு.க ஆட்சியிலே இருக்க வேண்டுமென்கிற கனவை நனவாக்கக்கூடிய ஒரு திட்டமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 110 விதியின்கீழே அறிவித்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இந்தக் குறுகிய காலத்தில், இந்தச் சட்டமன்றத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்கின்ற திட்டங்களைப் பார்க்கும்போது, நாம் 6 ஆம் மற்றும் 7 ஆம் வகுப்புகளில் படித்தபோது, அறிவியல் பாடத்தில் ஒட்டுண்ணி, சாருண்ணி என்ற ஒரு தத்துவத்தைச் சொல்வார்கள்.

சாருண்ணி என்பது ஒரு செடியையோ, ஒரு மரத்தையோ ஏதோ ஓர் உயிரைச் சார்ந்து, அதனுடன் போய் வாழும்போது, அந்தப் பயிரைச் சார்ந்து அந்தப் பூச்சி இருக்கும்போது, தானும் உண்ணும், தானும் வாழும், அந்த செடியையும் அழிக்காது. அதுதான் சாருண்ணி. அப்படி ஒரு சாருண்ணியின் தத்துவமாக, தன்னுடைய வாழ்நாளில் மக்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கக் கூடியவராகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒட்டுண்ணியைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அது, அதைச் சார்ந்ததை அழித்து, அது மட்டும் வாழ வேண்டுமென்று நினைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒட்டுண்ணி தத்துவம். எப்படி இன்றைக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டப் பேரவையில் சொன்னாரோ, தமிழகத்தை வஞ்சிக்கக்கூடிய திட்டங்களை மற்ற வெளி மாநிலங்களுக்கு மாற்றியவர்கள் யார் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவினை 1974—ல் தாரை வார்த்துக் கொடுத்தது யார் என்று புரிந்துகொள்ளுங்கள் என்றெல்லாம் சொன்னார்களோ (மேசையைத் தட்டும் ஒலி) — நான் அதைப் பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இன்றைக்கு மக்களுடைய மன நிலை எப்படியிருக்கிறது என்று சொன்னால்,

"நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற,

இந்த நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற,

நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற,

இந்த நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற,

என்றும் நல்லவங்க எல்லோரும் உங்க பின்னாலே,

நீங்க நினைத்தது எல்லாம் நடக்கும் எங்க கண்ணு முன்னாலே,

என்றும் நல்லவங்க எல்லோரும் உங்கள் பின்னாலே,

நீங்க நினைத்தது எல்லாம் நடக்கும் உங்க கண்ணு முன்னாலே,

நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற,

இந்த நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற" (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இதுதான் தமிழகம் முழுவதும் ஏழைகளின் இல்லங்களில் ஒலித்துக் கொண்டிருக்கிற ஒரு பாடலாக இருக்கிறது. அந்த ஏழை மக்களுக்காகத் தன்னை வருத்தி, தவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒவ்வொரு செயலும், வரலாற்றுச் சிறப்புமிக்கது. இத்தனை நலத் திட்டங்களும் மக்களுக்கான திட்டங்கள் என்பதைப் பெருமையாகச் சொல்லி, வரவேற்று, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1½ கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் நிரந்தரப் பொதுச் செயலாளரும், 7½ கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வமாக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தமிழக மக்களுக்கு நித்தமும் திட்டங்களை, வாரி வழங்கி, தமிழக மக்களின் இதயங்களில் நீங்காத இடம் பெற்ற, எங்களின் இதய தெய்வம், தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா

அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு வனத் துறை, பிற மாநிலங்களில் உள்ள வன அடர்த்தி பரப்பினைவிட மிக அதிகமாக்கி, மாநிலத்தின் பசுமைப் போர்வையை அதிகரித்துள்ளது. வன மற்றும் மர அடர்த்தி அதிகரிப்பு குறித்து 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை இந்திய வன நிலை அறிக்கை 2015–ன்படி அகில இந்தியாவிலேயே தமிழ்நாடுதான், (மேசையைத் தட்டும் ஒலி) வனப் பரப்பில் முதல் மாநிலம் என்ற பெருமையை உருவாக்கி, சாதனையை நிகழ்த்தியிருக்கின்றது. எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வனத் துறையின் சார்பில் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

தன் கூர்ந்த அறிவுத் திறத்தாலும், இதயத்தாலும், இணைத்துப் பார்க்கும் திட்டமாகத்தான், எந்தத் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு உதாரணமாக, நேற்றையதினம் வரலாற்றில் வைர எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய கூடங்குளம் அணு மின் நிலையத் திட்டத்தை, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு ரஷ்ய அதிபரையும், மாண்புமிகு பாரதப் பிரதமரையும் இணைத்து, திறந்து வைத்து, தமிழ்நாட்டிற்கு அர்ப்பணித்த முதலமைச்சருக்கெல்லாம் முதலமைச்சராகத் திகழ்கின்ற, எங்களைக் காக்கின்ற இதய தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–00

இன்றையதினம் வனத் துறைக்கு மேலும் சிறப்பு சேர்ப்பதற்கு நல்ல திட்டங்களை இங்கே அறிவித்திருக்கிறார்கள். மேற்கு தொடர்ச்சி மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள 300 மர வகைகளை ஓர் இடத்தில் வளர்த்து, மரபியல் பூங்காவை சென்னையில் அமைக்க ஒரு திட்டத்தையும், அரிய மற்றும் அழியும் தருவாயில் உள்ள மருத்துவத் தாவரங்களைப் பாதுகாத்து, வளர்த்திடும் நோக்கத்துடன், விதைகள் விற்பனை செய்திட,

திருச்சிராப்பள்ளி மாநகரில் ஒரு ஹெக்டர் நிலப் பரப்பில், வன மர விதைகள் மையம் ஏற்படுத்தும் திட்டத்தையும், 50 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து மாபெரும் புரட்சி செய்த மாண்புமிகு அம்மா அவர்கள், மருத்துவச் செடிகள் உற்பத்தி மற்றும் பாதுகாப்பை பெண்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுத்து, பெண்களுக்கு அதிகாரம் வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை மாபெரும் தலைவராக மக்கள் ஏற்றிருக்கின்றனர். வண்டலூர் உயிரியல் பூங்கா இந்தியாவிலேயே சிறந்த உயிரியல் பூங்கா. அந்தப் பூங்கா, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலோடு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதற்கு, மேலும் சிறப்புச் சேர்க்கின்ற வகையில் நேரடி ஒளிபரப்புக் கண்காட்சி வசதிகளை ஏற்படுத்துகின்ற அரிய அறிவிப்பை விதி 110–ன்கீழ் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அள்ளித் தந்து, அரவணைக்கும் அன்னையாய், பசுமையின் அவசியத்தை பார் எங்கும் போதிக்கும் பண்பின் சிகரமாய் விளங்குகிறார்கள். எங்கள் மாண்புமிகு இதய தெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி, வனத் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலர் சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கிறார்கள்; ஆனால், நமது மாண்புமிகு அம்மா ஒருவர்தான் சரித்திரமாகவே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுகளுக்குப் பிறகு, தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சி அமைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பினை வழங்கிய தமிழக மக்களுக்கு நன்றியினைத் தெரிவிக்கும்போது, மாண்புமிகு அம்மா அவர்கள், "என்னை இரண்டாவது முறையாகத் தொடர்ந்து ஆட்சி அமைத்திட வாய்ப்பு அளித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு அகராதியில் வார்த்தைகளே இல்லை. அதனால், எனது நன்றியினை எனது

செயல்களின்மூலம் தெரிவிப்பேன்" என்று வாஞ்சையுடன் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நன்றியினைச் செயல்படுத்தும்விதமாக, தமிழ்நாட்டிற்காகவும், தமிழக மக்களுக்காகவும், ஒவ்வொரு நிமிடமும் என்ன செய்ய வேண்டும், எதைச் செய்ய வேண்டும் எனச் சிந்தித்து, தேவையறிந்து, திட்டங்களைத் தீட்டி, அதற்குச் செயல்வடிவம் கொடுத்து வரும் எங்கள் தாயே. சிறைக் கைதிகளை காணொலிக் காட்சிமூலம் காவல் நீட்டிப்புச் செய்கின்ற திட்டத்தை விரிவுபடுத்தியும்; மத்தியச் சிறைச்சாலை, பெண்கள் தனிச் சிறைச்சாலை மற்றும் புதுக்கோட்டையிலுள்ள Borstal சிறைச்சாலைக்கு கண்காணிப்புக் கேமிராக்களைக் கூடுதலாகக் கொடுத்தும்; Smart card–களை வழங்கியும்; நீதித் துறை சுதந்திரமாகச் செயல்படவும், மக்களுக்கு விரைந்து நீதி கிடைக்கவும், நீதிமன்றங்களுக்குப் போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக திருப்பூர் மற்றும் திருவள்ளூர் ஒருங்கிணைந்த நீதிமன்றங்களுக்கு ரூ.57.26 கோடி செலவில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்டவும் இன்று அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது கோடானுகோடி நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமத்தின் தாயகமாய், தாய்மையின் ஓவியமாய், அன்னமிடும் அட்சயமாய், தமிழர்களின் திருமந்திரமாய் விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் இலட்சியத் தாய், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருப்பூர் மாவட்ட நீதிமன்ற வளாகம் மற்றும் குடியிருப்புகளுக்காக ரூ.33.75 கோடியை வாரி வழங்கிய வள்ளல். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, திருப்பூர் மாவட்ட மக்களின் சார்பிலும் நன்றி தெரிவித்து, வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மரங்கள் இயற்கை அளித்த வரம், மரங்கள் இல்லாத பூமியில் மனிதன் வாழ முடியாது. மரங்கள், அடர்ந்த வனங்கள் இயற்கையின் அருட்கொடைகள். வன வளத்தைப் பாதுகாக்கிற வகையில், கோடிக்கணக்கான மரங்களை நட்டு, ஒளிமிகு வாழ்வுக்கு வழிவகுக்கும் தொலைநோக்குப் பார்வையோடு நடவடிக்கை எடுத்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூபாய் 2 கோடியில் மரப் பூங்கா ஏற்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட எண்ணற்ற அறிவிப்புகளைச் செய்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டு மக்களை எப்படி உயிருக்கு உயிராக நேசிக்கிறார்களோ, அதைப்போன்று காடுகளும் பசுமையாக இருக்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு, தமிழினத்தைக் காத்திட்ட தாயுருவத் தெய்வம், உலகளாவி இருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மானிட சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட வல்லமை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்குப் பல்வேறு அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள்.*

பிற்பகல் 1–05

எனது அவினாசி தொகுதி அமைந்துள்ள திருப்பூர் மாவட்டத்திற்கு 33 கோடி ரூபாயிலே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் தந்தமைக்கு, எனது சார்பாகவும், என் தொகுதி உள்ளிட்ட திருப்பூர் மாவட்ட மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக்கிய மணிமேகலை போல, தனக்கென வாழாமல் தவ வாழ்வு வாழும் தமிழகத்தின் தவப் பயன் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறைத் துறை சார்பாக பல்வேறு அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர்களின் கருத்துகளோடு எனது உணர்வுகளையும் இணைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)